### நெல்லை மாவட்டத்தில் - நீரில் மூழ்கி உயிரிழந்த

# 2 பேரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, மே 11 –

திருநெல்வேலி மாவட்டத்தில் நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட் டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளை யங்கோட்டை வட்டம், கீழநத்தம் கடநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த பாண்டி என்பவரது வீட்டிற்குச் சென்றிருந்த சென் னையைச் சேர்ந்த ஸ்ரீராம், த/பெ.பால கிருஷ்ணன் (வயது 25) மற்றும் அருண் குமார், த/பெ.ஆறுமுகம் (வயது 23) ஆகியோர் நண்பர்களுடன் 8.5.2023 அன்று மதியம் தாமிரபரணி ஆற்றில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராத வித மாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனை யடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலை யும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந் தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க வும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சூடான் நாட்டில் சிக்கித் தவித்த 247 தமிழர்கள் மீட்பு!

## தமிழ்நாடு அரசு விரைந்து நடவடிக்கை!

சென்னை, மே 11–

சூடான் நாட்டில் நடைபெற்று வரும் இராணுவம் மற்றும் உள்நாட்டு படைப் பிரிவினர்களுக்கு இடையேயான மோதல்களினால் ஏற்பட்ட அசாதா ரண சூழ்நிலை காரணமாக, அங்கு வசித்த தமிழ் மக்கள் உட்பட ஏராள மான இந்தியர்கள் பாதுகாப்பற்ற நிலையில் சிக்கித் தவித்தனர்.

அவர்களை மீட்க கோரி அங்குள்ள தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள அவர்களது குடும்பத்தினரிமிருந்து தமிழ்நாடு அரசிற்கு தொடர் கோரிக் கைகள் வரப்பெற்றன.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப் படி, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் ஒருங்கிணைப்பில் அயலகத் தமிழர் நலத்துறையின் மூலம் சூடானில் உள்ள தமிழர்களுடன் அலைபேசி வாயிலாக தொடர்பு ஏற்படுத்தப்பட்டு.

தனியாக வாட்ஸ்–ஆப் குழுக்கள் உரு வாக்கப்பட்டு அவர்களுக்கு உரிய வழி காட்டுதல்கள் வழங்கப்பட்டு நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வந் தது. இந்நேர்வில் மீட்பு பணியை துரி தப்படுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய பிரதமர் அவர்களி டம், சூடானில் சிக்கியுள்ள இந்தியர் களை மீட்கும் "ஆப்ரேசன் காவிரி" என்ற திட்டத்தில் தமிழ் நாடு அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

அதன் தொடர்ச்சியாக சூடானில் சிக்கியிருந்த இந்தியர்களை மீட்டு, சவுதி அரேபியாவில் உள்ள ஜெத்தா விற்கு அழைத்து வரப்பட்டு அங்கி ருந்து விமானம் மூலம் புதுடெல்லி, மும்பை, பெங்களூரு, கொச்சின் மற் றும் அகமதாபாத் விமான நிலையங் களுக்கு அழைத்து வரக்கூடிய பணி கள் ஒன்றிய அரசுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு வரும் தமிழர்களுக்கு உதவிடும் வகை யில் புதுடெல்லி மற்றும் மும்பை விமான நிலையங்கள் மற்றும் சென்னை, அயலகத் தமிழர் நலத்து றையில் தமிழ்நாடு அரசின் சார்பில் உதவி மையங்கள் அமைக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசின் தொடர் நடவ டிக்கை மற்றும் ஒன்றிய அரசின் உத வியுடன் விமான புதுடெல்லி, மும்பை, கொச்சி, அகமதாபாத் மற்றும் பெங்க ளூரு விமானநிலையங்களில் கடந்த 05.05.2023 வரை வந்தடைந்த 31 மாவட்டங்களைச் சேர்ந்த 247 தமிழர் கள் மாநில அரசின் சார்பாக விமானங் கள் மூலமாக சென்னை, கோயம்புத் தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய விமான நிலையங்களுக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுக்கு தேவை யான உணவு மற்றும் இதர தேவை கள் பூர்த்தி செய்யப்பட்டு மாநில அரசின் சார்பாக வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு பாதுகாப்பாக அவர்க ளது சொந்த ஊருக்கு அனுப்பிவைக் கப்பட்டனர்.

### பிற மாநிலங்கள் பின்பற்றக்கூடிய அரிய திட்டங்கள் மூலம்

# இந்தியாவில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக்கியவர்!

## இரண்டாண்டு கால சாதனை ஆட்சியை வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பொன்குமார் வாழ்த்து!

சென்னை, மே 11-

விவசாயிகள் - தொழி லாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் திரா விட முன்னேற்றக் கழக அரசு தமிழ்நாட்டில் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை சாத னைகளோடு நிறைவு செய்தி ருக்கிறது. மிகுந்த சோதனை நிறைந்த நிலையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர் கள், சோதனைகளைக் கடந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி, உலக அளவில் பாராட்டுதலை பெற்று வரும் முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை விவசாயிகள் - தொழிலாளர் கள் கட்சியின் சார்பில் பாராட் டுகிறேன், வாழ்த்துகிறேன்.

**உலகளவில் புகழ்பெற்றார்!**

2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நிலையில் தமிழ்நாட்டில் கொரோனா வின் இரண்டாவது கொடிய தாக்கம் இந்தியா முழுவதும் தலைவிரித்தாடியது. தமிழ் நாட்டிலும் அது உச்சத்திற்கு சென்றது. மருத்துவமனையில் இடப்பற்றாக்குறை, ஆக்சிஜன் சிலிண்டர் மற்றும் வென்டி லேட்டர் பற்றாக்குறை, ஆம்பு லன்ஸ்களை மருத்துவமனை யாக மாற்றிய சூழல்; இப்படி ஒரு கொடூர நிலை ஏற்பட்ட பொழுது முதலமைச்சராக பொறுப்பேற்பதற்கு முன்னரே தளபதி மு.க.ஸ்டாலின் அவர் கள் எடுத்த தொடர் நடவடிக் கையின் விளைவாக உலகம் வியக்கும் வண்ணம் குறுகிய காலத்தில் கொரோனாவின் இரண்டாம் அலையின் கொடிய தாக்குதலை தடுத்து நிறுத்தி உலக அளவில் புகழ் பெற்றார்.

விளையும் பயிர் முளையி லேயே தெரியும் என்பதற்கு ஏற்ப தளபதியாருடைய அரசு எப்படி செயல்பட போகிறது என்பதற்கு இந்த கொரோனா இரண்டாம் அலையை கட்டுப் படுத்திய விதமே சான்றாக நின் றது. திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையில், மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட் டிருந்தன. ஆனால் முந்தைய 10 ஆண்டுகால அ.தி.மு.க.வின் பாழ்பட்ட ஆட்சியின் காரண மாக ஏறத்தாழ 6 லட்சம் கோடிக்கு அதிகமாக கடன் சுமையை தமிழ்நாடு அரசின் மீது ஏற்றப்பட்டது. எனவே இந்த நிதி நெருக்கடியை சமா ளித்து மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை அறிவிப்பதில் முதல்வர் காட்டிய முனைப் பால் அதில் வெற்றியும் கிட்டி யது.

தேர்தல் அறிக்கையில் சொன்னது, தேர்தல் அறிக்கை யில் அறிவிக்காத மக்கள் நலன் சார்ந்தது, என பல்வேறு சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளன. மகளிருக்கான இலவச பேருந்து திட்டம், உயர்க் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் வழங்கும் திட் டம், மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி திட்டம், மக்களை தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காக் கும் 48 மணி நேரத் திட்டம் இப்படி மக்களுக்கானத் திட் டங்களை முதல்வர் அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகி றார். இவையெல்லாம் இன் றைக்கு பிற மாநிலங்களில் எதி ரொலிக்கக் கூடிய நிலையை நாம் கண்கூடாக பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

தொழிலாளர் துறையின் கீழ் செயல்படக்கூடிய கட்டு மானத் தொழிலாளர்கள் உள் ளிட்ட அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் மூலம் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் தள பதியார் அரசு எண்ணற்ற திட் டங்களை நிறைவேற்றி உள் ளது. தொழிலாளர்களுக்கு நல வாரியங்களை மூலம் நடைமு றைப்படுத்தப்படும் திட்டங்க ளின் உதவித்தொகைகள் கடந்த 2006-2011 கலைஞர் ஆட்சி காலத்தில் அறிவிக்கப் பட்ட தொகையில் ஒரு பைசா கூட உயர்த்தாமல், தொழிலா ளர்களுக்கு எந்த திட்டப் பயன் களும் கிடைக்காமல் பத் தாண்டு கால அ.தி.மு.க ஆட்சியில் நல வாரியங்கள் முடங்கிக் கிடந்தன. தளபதி யார் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு வாரியங்கள் முடிக்கி விடப்பட்டுள்ளன. எல்லா திட் டங்களும் இரட்டிப்பாக்கப் பட்டுள்ளன. சாலை விபத் திற்கு வழங்கப்பட்டு வந்த ஒரு லட்சம், இரண்டு லட்ச ரூபா யாக உயர்த்தப்பட்டுள்ளது. இயற்கை இறப்பிற்கு வழங்கப் பட்ட ரூ.25,000 தொகை, ரூ.50,000 ஆக உயர்த்தப்பட் டுள்ளது. திருமண உதவித் தொகை 20 ஆயிரமாகவும், பேருகால உதவி தொகை 18 ஆயிரமாகவும் உயர்த்தப்பட் டுள்ளது. கல்வி உதவித்தொகை இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

இதைத் தாண்டி கட்டுமா னத் தொழிலாளர்கள் சொந்த மாக வீடு கட்டிக் கொள்ள நான்கு லட்சம் இலவசமாக வழங்கக்கூடிய அரிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகி றது. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., மருத் துவம் போன்ற கல்வி படிக்கும் மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் அனைத்தையும் வாரியம் ஏற்றுக்கொள்ளக்கூ டிய அறிவிப்பு வெளியிடப்பட் டுள்ளது.

இப்படி தளபதியாருடைய அரசு அமைப்புசாராத் தொழி லாளர்களுக்கு அறிவித்து நடை முறைப்படுத்தக் கூடிய திட் டங்களால் இரண்டு ஆண்டு காலத்தில் கட்டுமானத் தொழி லாளர்கள் வாரியத்தில் மட்டும் 10 லட்சம் உறுப்பினர்கள் புதி தாக பதிவு செய்துள்ளனர் என் பது இந்த அரசின் செயல்பாட் டிற்கு ஒரு நற்சான்றாகும். தொழிலாளர் துறையின் கீழ் செயல்படக்கூடிய ஒரு பிரி வான அமைப்புசாரா வாரியங் களில் மட்டுமே இவ்வளவு மாற்றங்கள் இரண்டு ஆண்டு காலத்தில் ஏற்பட்டுள்ளது என் றால் மொத்த துறையும் கணக் கெடுத்தால் மாபெரும் மாற் றங்களும், ஏற்றங்களும் ஏற்பட்டு உள்ளன என்பது தெளிவாகும்.

**முதன்மை மாநிலமாக தமிழ்நாடு!**

2006-2011 காலகட்டத்தில் தொழில்துறையில் இந்தியாவி லேயே மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்நாடு, கடந்த பத் தாண்டு கால அ.தி.மு.க ஆட்சி யில் பல்வேறு தொழிற்சாலை கள் அண்டை மாநிலங்களுக்கு புலம்பெயர்ந்து சென்று விட்ட தால் மூன்றாவது இடத்தில் இருந்து 14வது இடத்திற்கு தமிழ்நாடு பின்னோக்கி சென் றது. அதனை மீண்டும் முதல்வ ரின் கடும் உழைப்பால் தொழில்துறையை மூன்றாவது இடத்திற்கு தமிழ்நாட்டை கொண்டு வருவதற்கு பல்வேறு முயற்சிகள், அந்நிய முதலீடுகள் ஈர்ப்பு, தொழிற்சாலைகள் தொடங்கிட புரிந்துணர்வு ஒப் பந்தங்கள் போடப்பட்டு வரு கின்றன.

இப்படிப்பட்ட செயல்க ளால் தமிழ்நாடு இந்தியாவின் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகிறது. அந்த நிலையை அடைவதற்கு அல்லும், பகலும் அயராது உழைத் துக் கொண்டி ருக்கும் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை விவசாயிகள் - தொழிலாளர் கள் கட்சி வாழ்த்துகள், பாராட்டுகிறது. அடுத்த மூன்று ஆண்டு காலத்தில் தமிழ்நாட் டில் பொற்கால ஆட்சியை கொண்டுவர முதல்வருடைய பணிகள் தொடர மீண்டும் வாழ்த்துகிறோம்.

இவ்வாறு பொன்.குமார் தமது அறிக்கையில் கூறி யுள்ளார்.

# பாட்டாளி மகளே! பல்லாண்டு வாழ்க!



மகளே! அன்பு நந்தினி!
மாணவர் உலகக் கண்மணி!
மாபெரும் சாதனைப் பெண்மணி!
வாழ்க! வாழ்க!பல் லாண்டு நீ!

அறுநூறுக்கு அறுநூறு!
அடித்தாயே சதம்நூறு!
பறைகொட்டும் திசையெட்டும்!
படைத்தாயே வரலாறு!

கற்றவற்றில் ஒன்றையும்நீ
மறக்க வில்லையே!.. உன்
கவனம்எங்கும் சிறகுகட்டிப்
பறக்க வில்லையே!
பெற்றவரும் செல்வந்தராய்
சிறக்க வில்லையே!.. நீ
பிரம்மாவின் நெற்றியிலும்
பிறக்க வில்லையே!

யார்தடுத்தும் ஒடுங்குவதோ
அறிவின் எல்லையே?.. உன்
ஆர்வம்மிக்க ஆற்றலுக்கு
நிகரும் இல்லையே!
பார்வியக்கும் எழுத்தறிவில்
வாய்த்த பிள்ளையே!.. நீ
பாட்டாளித் தாய்வயிற்றில்
பூத்த முல்லையே!

மன்னுபுகழ் பொறித்திடுவாய்
வாழ்க்கை முழுதுமே!.. உனக்கு
மாலையிடக் காத்திருக்கும்
இந்த உலகமே!
இன்னும்இன்னும் உயரம்உண்டு!
எழுக! துரிதமே!.. நீ
"ஏவுகணை ஏகலைவி"
எழுது சரிதமே!

உந்துசக்திக் கல்வியல்லால்
சமூகம் தரிசன்றோ!.. பெண்
உரிமைக்கான போர்க்களங்கள்
கொடுத்த பரிசன்றோ!
துந்துபி முழங்கிடட்டும்!
அதிர்க முரசமே!.. உன்னைத்
தோளில்கொண் டாடும்எங்கள்
கழக அரசுமே!

மகளே! அன்பு நந்தினி!
மாணவர் உலகக் கண்மணி!
மாபெரும் சாதனைப் பெண்மணி!
வாழ்க! வாழ்க!பல் லாண்டு நீ!

அறுநூறுக்கு அறுநூறு!
அடித்தாயே சதம்நூறு!
பறைகொட்டும் திசையெட்டும்!
படைத்தாயே வரலாறு!



- கவிச்சுடர் கவிதைப்பித்தன்

### அமைச்சர் கே.என்.நேரு தலைமை! ஆ.இராசா எம்.பி,அமைச்சர் எஸ்.ரகுபதி முன்னிலையில்

# மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க தலைவர் ரெ.தங்கம்-சரிதா இல்ல விழா!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், கே.கே.செல்லபாண்டியன்,டாக்டர் வை.முத்துராஜா, எம்.எம்.அப்துல்லா பங்கேற்பு!

புதுக்கோட்டை, மே 11-

புதுக்கோட்டை மாவட் டம்,ஆலங்குடி தாலுக்கா, கீழாத்தூர் கிராமத்தை சேர்ந்த தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உறுப்பினர், தமிழ் நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம்சரிதா தங்கம் இல்ல காதணி விழா ஆலங்குடி ஸ்ரீகுரு ராகவேந் திர திருமண மஹாலில் 14.5.2023, ஞாயிற்றுக்கி ழமை காலை 10.30 மணி முதல் 11.30 மணிக்குள் நக ராட்சி நிர்வாகத்துறை அமைச்சரும்,கழக முதன் மைச்செயலாளர் கே.என். நேரு தலைமையில்

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்பி, முன்னிலையில் காதணி செல்வங்கள் அஞ்சுகம் தங் கம், கயல்விழிதங்கம், வகு லாதேவி (எ) தனலெட்சுமி ஆகியோருக்கு காதணி விழா நடைபெறுகிறது.

விழாவில் தெற்கு மாவட்ட கழக மாவட்ட கழக செயலாளரும் சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகு பதி, சுற்றுசூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வர வேற்புரையாற்றுகின்றனர்.

மாவட்ட கழக செயலா ளர் கே.கே.செல்லபாண்டி யன், டாக்டர் வை.முத்து ராஜா எம்.எல்.ஏ., எம்.எம். அப்துல்லா எம்.பி., காசி. முத்துமாணிக்கம், திருச்சி வடக்கு மாவட்டச் செயலா ளர் காடுவெட்டி ந.தியாக ராஜன் எம்.எல்.ஏ., சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ., தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ., ஜெ.கருணா நிதி எம்.எல்.ஏ., திருச்சி மத் திய மாவட்ட செயலாளர் க.வைரமணி, என். சின்னத்துரை எம்.எல்.ஏ., எஸ்.டி.ராமச்சந்திரன் எம். எல்.ஏ., மேயர் மு.அன்பழ கன், பெரியண்ணன் அரசு, கவிச்சுடர் கவிதைப்பித்தன், அஞ்சுக மீனாட்சி, த.சந்திர சேகரன், அரு.வீரமணி, கேஆர்என்.போஸ், எம். எஸ்.அசோக்பாண்டியன், பி.டி.அரசகுமார், சுபா.மதி யரசன், எஸ்ஆர்.அண்ணா மலை, எஸ்.ராமச்சந்திரன், கேபிகே.டி.தங்கமணி, ஜெயலெட்சுமிதமிழ்செல் வன், திலகவதிசெந்தில், மாவட்ட அரசு பொது வழக்கறிஞர் பா.வெங்கடேசன், வீர பாண்டி டாக்டர் ஆ.பிரபு, திருச்சி கேஎம்டி.விஸ்வா, வீர.சரவணன், ஏ.பழனிக்கு மார், கேசி.சிவக்குமார், ஆர்.ரெத்தினவேல், தலைமை செயற்குழு உறுப் பினர்கள் கீரை.தமிழ்ராஜா, ஆகியோர் பங்கேற்று குழந்தை செல்வங்களை வாழ்த்துகின்றனர்.

மாவட்ட கழக நிர்வாகி கள் ஆ.சுப்பிரமணியன், ஞான.இளங்கோவன், ரீதேவி அண்ணாதுரை, அபு தாஹிர், பெ.ராஜேஸ்வரி, க.மதியழகன் எஸ்எஸ்.கருப் பையா, எம்.லியாகத்அலி, ஒன்றிய கழக செயலாளர் கள் கே.எஸ்.ரவி, அரு.வடி வேலு,உதயம் சண்மு கம்,சக்தி ராமசாமி,சீனியார் என்ற முகமது அப்துல்லா, அழகு சிதம்பரம், பொன். ராமலிங்கம், ஆர்.கணேசன், வி.ஆர்.இளையராஜா, பொன்.துரை, அடைக்கல மணி,முத்து, பொன்.கணே சன், எல்.குமார் என்ற துரைக்கண்ணு, க.ராஜேந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர். சாமிநாதன், தமிழ்.அய்யா, எம்.பரமசிவம், என். சேட்டு, ஒ.எஸ்.வெங்கடாச லம், கே.எஸ்.சந்திரன், ஆர் ஆர்எஸ்.மாரிமுத்து, முபிமா.சந்தியசீலன், ஆர். இளஞ்குமரன், வே.முத்துகிருஷ்ணன், கேபி.அய்யப்பன், தவ. பாஞ்சாலன்,

தெற்கு, வடக்கு பேரூர் கழக செயலாளர்கள் ஆ. செந்தில், அ.அழகப்பன், பி.அண்ணாத்துரை, உ.முரு கேசன், வீ.விஜயகுமார், எம் எஸ்.அக்பர்அலி,

ஒன்றிய பெருந்தலைவர் கள்: கேபிகே.டி.வள்ளியம் மைதங்கமணி, மகேஷ்வரி சண்முகநாதன், மேகலாமுத்து, மாலா ராஜேந்திரதுரை, சுதாஅ டைக்கலமணி, ராசிமுருகா னந்தம், உமதேவி, சுந்தரிஅழகப்பன், மாரிக் கண்ணுமுத்துக்குமார், பி. சீனிவாசன்,

மாவட்ட பிரதிநிதிகள்: கேவிஎஸ்.ஏ.மோகன், ஏ.அருளானந்தம், எம்ஜி. என்ற ஆர்.ராமச்சந்திரன், ச.முருகன், ஆர்.நாராயண சாமி, வீர.மெய்யர், என். சங்கர்,எம்.முருகன், கி.வீரப் பன், சுப.மணிமொழியன், ஆதி.கருணாநிதி, இரா. நிறைவு அண்ணா, சுப.சண் முகநாதன், டி.மகேஷ்வரன், கே.கணேசன், ஐ.லூர்துநாதன், கேஆர். வெள்ளைச்சாமி, எல்.கணே சன், எம்எஸ்கே.சின்ன ராஜா, க.ரமேஷ், போடி. காமராஜர், துரையூர்.அ.பாஸ்கரன், கம் பம் சாதிக், கேபிகே.பனை யப்பன்,

கேபிகே.டி.பாஸ்கர், சர வெடி சரத்பாலா, நாகூர் ஒய்.ஹாஜாசாஹிப் உள் ளிட்டோர் பங்கேற் கின்றனர்.



சென்னை வட கிழக்கு மாவட்டம், மாதவரம் தெற்கு பகுதி சார்பில் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் 32வது வட்டத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை வட கிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றினார். உடன் பகுதி கழக செயலாளர் ஜி.துக்காராம், மண்டலக் குழு தலைவர் எஸ்.நந்தகோபால், 32வது வட்டகழக செயலாளர் எம். சரவணன், மாமன்ற உறுப்பினர் இ.ஏழுமலை, மாவட்ட பிரதிநிதிகள் தேவி கௌதமன், சிவில் செல்வம், விஜயலட்சுமி ஆனந்த், டி.ரமணன், டி.சுந்தரம் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டகழக, மகளிர் அணி, இளைஞர் அணி மற்றும் அனைத்துக் கழக நிர்வாகிகளும், பொதுமக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

### அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி நடத்தும்

# காவல் சார்பு ஆய்வாளர் தேர்விற்கான இலவச ஆன்லைன் பயிற்சி வகுப்புகள்!

சென்னை, மே 11 -

தமிழ்நாடு அரசின் முதன்மைப் பயிற்சி நிறுவ னமான அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் பணிபுரிபவர்களுக்குப் பல் வேறு நேர்முகப் பயிற்சி களை அளித்து வருகிறது.

பல்வேறு அரசு நிறுவ னங்கள் நடத்தும் போட் டித் தேர்வுகளுக்கென இக் கல்லூரி தனது AIM TN என்றழைக்கப்படும் காணொலிப்பாதை (YouTube Channel) மூலம் இணையதள வகுப்புகளை நடத்தி வருகி றது. முதன்முதலாக தமிழ் நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் காவலர் பத விகளுக்கு நடத்திய தேர்வு களுக்கு 100 பயிற்சிக் காணொலிகளைத் தயா ரித்து பதிவேற்றம் செய்தது.

இந்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றியின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வா ணையம் நடத்திய குரூப் 2/2A முதன்மைத் தேர்விற் கும், ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணை யம் நடத்திய எம்.டி.எஸ். தேர்விற்கும் பயிற்சிக் காணொலிகளைப் பதிவேற் றம் செய்தது.

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் தற்போது காவல் சார்பு ஆய் வாளர் பதவிகளுக்குத் தேர் வினை நடத்துவதற்கான அறிவிப்பினை வெளியிட் டுள்ளது. அண்ணா நிர்வா கப் பணியாளர் கல்லூரி இப்போட்டித் தேர்விற் கான இலவச இணையதள வகுப்புகளை நேற்று (10/5/2023) முதல் தொடங்கியது.

இந்தத் தேர்விற்கான பாடத்திட்டத்தில் கூறப் பட்டுள்ள தமிழ் தகுதித் தேர்வு (இலக்கணம், இலக் கியம், தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும்), பொது அறிவு (விஞ்ஞானம், வர லாறு, புவியியல், பொருளா தாரம், இந்திய அரசியல், தற்கால நிகழ்வுகள்), உளவி யல் (தருக்கப் பகுப்பாய்வு, எண் பகுப்பாய்வு, தகவல் தொடர்புத் திறன், செய்திக ளைக் கையாளும் திறன், அறிவாற்றல் திறன்) என்று அனைத்துப் பிரிவுகளிலும் பாடங்கள் கற்பிக்கப்படும்.

'சாகசம் 60' என்று பெய ரிடப்பட்டுள்ள இந்த இணையதளப் பயிற்சியில் மொத்தம் 180 பயிற்சிக் காணொலிகள் 60 நாட்க ளில் பதிவேற்றம் செய்யப்ப டும். இடையிடையே சுமார் 20 மாதிரித் தேர்வுக ளும் நடத்தப்படும்.

மாதிரித் தேர்வுகளை நடத்துவதற்கென்றே இந் தக் கல்லூரி 'நோக்கம்' (Nokkam) என்று பெயரிடப் பட்டுள்ள மென்செயலி ஒன்றைத் தயாரித்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தேர்வினை எழுதிய உட னேயே தங்களது மதிப் பெண்களைத் தெரிந்து கொள்ளலாம். மேலும் சரி யான பதில்களுக்கான விளக்கங்களும் அங்கு கொடுக்கப்படும். பதிவேற் றம் செய்யப்படும் காணொ லிகளையும் இந்தச் செயலி யின் மூலம் மாணவர்கள் பார்த்துக்கொள்ளலாம். பாடக் குறிப்புகளைப் பதி விறக்கம் செய்து கொள்ள லாம். இந்தச் செயலி ப்ளே ஸ்டோரில் கிடைக்கும்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் இரண்டாம் ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் புதுகும்மிடிப்பூண்டியில் ஒன்றிய கழகச் செயலாளர் கே.வி. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், கும்முடிபூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் டாக்டர் தயாநிதி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, நிர்வாகிகள் ஆரணி வெ.அன்புவாணன், மு.பகலவன், பா.செ.குணசேகர், ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் மு.மணிபாலன், பரிமளம், அறிவழகன், ஒன்றிய கழக நிர்வாகிகள் என்.எஸ்.மூர்த்தி, கே.இ.திருமலை, கே.சுரேஷ் குமார், துர்கா வெங்கடேசன், வி.புருஷோத்தமன், கேஜி.நமச்சிவாயம், வி.ஆர்.கணேசன், இ.பிரபு உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.